செய்தி வெளியீடு எண் : 221 நாள் : 03.02.2024

# செய்தி வெளியீடு

## டிசம்பர் 2023–இல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து தலைமைச்செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலான ஒருநாள் கருத்தரங்கு கூட்டம்

இன்று (03.02.2024) தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10வது தளத்தில் உள்ள கூட்டரங்கத்தில் தலைமைச்செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் " டிசம்பர் 2023–இல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள்" (Learning from Twin Disasters of December 2023 and Way Forward) குறித்த ஒரு நாள் கருத்து பரிமாற்ற பயிலரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பங்கேற்ற அலுவலர்கள் தனித்தனியே 7 குழுக்களாக பிரிந்து, விவாதித்து அறிக்கை வழங்கினார்கள்.

1. பேரிடர் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல் தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் தலைமையில் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் நடத்திய கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.
2. உடனடி தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பாக கூடுதல் தலைமைச்செயலாளர், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அவர்களின் தலைமையில், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.
3. உடனடி நிவாரணம் வழங்குதல் தொடர்பாக, கூடுதல் தலைமைச்செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின்

தலைமையில், முதன்மைச் செயலாளர், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

4. உள்கட்டமைப்புகளின் மீட்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தொடர்பாக, கூடுதல் தலைமைச்செயலாளர், நீர்வளத்துறை அவர்களின் தலைமையில் கூடுதல் தலைமைச்செயலாளர் நெடுஞ்சாலைத்துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

5. வெள்ளத் தடுப்புக்கான நகர்ப்புறத் திட்டமிடல் தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை அவர்களின் தலைமையில், துறை அதிகாரிகள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

6. சமூக ஈடுபாடுகள் பணி தொடர்பாக கூடுதல் தலைமைச்செயலாளர் அவர்களின் தலைமையில், கூடுதல் தலைமைச்செயலாளர், தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

7. மக்கள் தொடர்புத் துறை பணிகள் தொடர்பாக முதன்மைச் செயலாளர், பள்ளி கல்வித்துறை அவர்களின் தலைமையில், செயலர், செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் பேரிடர்களை சந்திப்பதில் தக்க மேல்நடைவடிக்கைகள் எடுக்கப்படும் என தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in